**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**OS.No.836/2024 P.W.1**

(சாட்சிக்கு திரு.V.பிரதாப், உதவியாளர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | |
|---|---|
| பெயர் | லட்சுமி |
| க/பெ. | கிருஷ்ணன் |
| வயது | 77 |
| வசிப்பிடம் | எண்.51பி, சீனிவாசாநகர், பாலையா கார்டன், மடிப்பாக்கம் |
| தொழில் | வீட்டு நிர்வாகம் |

**முதல் விசாரணை 20.04.2026**

நான் இந்த வழக்கில் வாதி. இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 11.05.1979 தேதியிட்ட முதல் பிரதிவாதியின் பெயரிலுள்ள கிரய பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1. 02.11.2011 தேதியிட்ட முதல் பிரதிவாதியின் பெயரிலுள்ள பட்டா பதிவிறக்க நகல் வா.சா.ஆ.2. முதல் பிரதிவாதியின் பெயரிலுள்ள மின் கட்டண அட்டை அசல் வா.சா.ஆ.3. 01.03.2024 தேதியிட்ட முதல் பிரதிவாதி கிருஷ்ணன் என்பவர் 2, 3 பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)